**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 72/2015**
**வழக்கு சாட்சி. அ.சா.5**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | மருதமுத்து | **தாலுகா:** | |
| **தந்தை பெயர்:** | கந்தசாமி | **தொழில்:** | காவல் உதவி ஆய்வாளர் |
| **கிராமம்:** | அறந்தாங்கி | **வயது:** | 58/2026 |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**Accused No. A1 to A3 absent and Counsel present. Absent Petition filed and allowed.**

**As per Circular of the Hon'ble High Court of Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**தேதி : 06.05.2026.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் அறந்தாங்கி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.கலியபெருமாள் உடல் நிலை சரியில்லாமல் இருந்துவருவதாலும், மற்றொரு சிறப்பு உதவி ஆய்வாளர் கண்ணதாசன் கடந்த 01.09.2016 ஆம் தேதி இறந்துவிட்டபடியாலும், மேற்படி நபர்களின் எழுத்து நடை மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு நீதிமன்ற அனுமதியுடன் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை இன்றி ஆவணங்களை பார்வையிட்டு நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 21.11.2014 ஆம் தேதி அறந்தாங்கி அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலின் பேரில் இராஜேந்திரன் த/பெ.தங்கவேல் என்பவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தை அறந்தாங்கி காவல் நிலைய குற்ற எண்.573/2014 இன் கீழ், இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(1) இன் கீழ் முதல் தகவல் அறிக்கையை இறந்துபோன புலன் விசாரணை அதிகாரி கண்ணதாசன் பதிவு செய்தார். மேற்படி **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகளை காவல் நிலைய பிணையில் விடுவித்து தகுந்த பிணையம் தரப்பட்டுள்ளது. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ தேதியிலேயே தயார் செய்துள்ளார். மேற்படி **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம்** முறையே **அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு மருத்துவரின் வாக்குமூலத்தினை பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்பு வழக்கின் புலன் விசாரணையை முடித்து புலன் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் இவ்வழக்கின் ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான். நான் சொன்னதுபோல் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் சொன்ன நேரம், நாள், இடத்தில் வைத்து பதிவு செய்யப்படவில்லை என்றாலும், அவைகள் காவல் நிலையத்தில் வைத்துதான் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும், சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகளுக்கும், வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல. இவ்வழக்கில் முறையாக புலன் விசாரணை செய்யப்படாமல் மேல் அதிகாரிகளின் கூற்றுக்கிணங்க குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**அறந்தாங்கி.**